# JOURNAL OF SOCIAL REVIEW

ISSN: 2448 - 9204

**Volume 6** | **Issue 1** | **June 2019**

## RESEARCH ARTICLES

ஒழுக்க மெய்யியல் நோக்கில் தண்டனை முறைமையும் நீதி வழங்கலும்: ஒரு பகுப்பாய்வு
***ஐ.எல்.எம். மாஹிர்***

இலங்கையில் உள்ளூராட்சி அரசாங்கமும் உள்ளூர் ஜனநாயகமும்: கோட்பாட்டு மற்றும் அனுபவ ஆய்வுகள் குறித்த மீள்நோக்கு
***எம்.ஏ.எம். பௌசர்***

சமூக உளவியலும் அதன் வரலாற்று விருத்திக் கட்டங்களும்
***எஸ்.எம். அய்யூப்***

திருமந்திரம் காட்டும் வாழ்வியற் சிந்தனைகள்
***விக்னேஸ்வரி பவநேசன்***

"தவறான எண்ணத்தைப் போக்குதலும் மீள் உருவாக்கமும்: ஒரு கற்கைத்துறைக்கான தேடல்": டேவிட் ரூமனின் கட்டுரை குறித்த வியாக்கியானமும் மதிப்பீடும்
***எம்.ஏ.எம். பௌசர்***

தற்கொலை: காரணங்களும் பரிகாரங்களும்
***எஸ்.எம். அய்யூப்***

கல்வி மற்றும் அழகியல் குறித்த பிளேட்டோவின் கருத்துக்கள்: குடியரசு நூலை மையப்படுத்திய நோக்கு
***க. கணேசராஜா***

சைவசித்தாந்த மற்றும் பௌத்த மெய்யியல்களில் குறிப்பிடப்படும் ஒழுக்கவியல் கருத்துக்கள்: ஓர் ஒப்பீட்டாய்வு
***பீ. பூலோகநாதன் & கே. தவசீலன்***

மொழிப் பயன்பாடும் மொழிப் பகுப்பாய்வும்: விக்கென்ஸ்டைன் சிந்தனைகளின் பிரயோகத்தன்மை குறித்த ஒரு மீளாய்வு
***திரவியநாதன் திலீபன் & மார்க்கண்டன் ரூபவதனன்***

Institutional Aspects of Promoting Entrepreneurship as a Career goal among Youth: Special reference with Eastern Province
***U.K. Sulfikar & M.A.C. Sulaiha Beevi Athambawa***

**Published by:**
Department of Social Sciences
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
University Park
Oluvil, Sri Lanka.

**Copyright © June 2019**

**DEPARTMENT OF SOCIAL SCIENCES**

**FACULTY OF ARTS AND CULTURE, SEUSL.**

**Journal of Social Review**

is peer reviewed bi-Annual International Journal devoted to the pursuit of knowledge and continuing inquiry into the field of humanities and Social Sciences. It is published by the Department of Social Sciences, Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.

**ISSN: 2448 - 9204**

**Published by: Department of Social Sciences**
Editorial Office / Journal of Social Review
Department of Social Sciences
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
University Park
Oluvil #32360, Sri Lanka.
Tel No: 0094 67 2255182
Fax: 0094 67 2255182
E-mail: socialreview2014@gmail.com
Website: www.seu.ac.lk

**Editor in Chief (2019):** Dr. K. Kanesarajah

***All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without written consent of the publisher.***

*Journal of Social Review, 6(1), June 2019*
*Department of Social Sciences*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*

# சைவசித்தாந்த மற்றும் பௌத்த மெய்யியல்களில் குறிப்பிடப்படும் ஒழுக்கவியல் கருத்துக்கள்: ஓர் ஒப்பீட்டாய்வு

**பீ. பூலோகநாதன்[1] & கே. தவசீலன்**
[1]வருகைதரு விரிவுரையாளர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

Correspondence: ponnuthurainathan1985@gmail.com

**கட்டுரைச் சுருக்கம்**

*இந்தியாவில் தோற்றம் பெற்ற தத்துவங்களில் வேத உபநிடதங்களை ஏற்று அவற்றை அடிப்படையாகக் கொண்டவை வைதீக நெறிகள் எனவும் அவற்றை ஏற்காதவை அவைதீக நெறிகள் எனவும் குறிப்பிடுவர். சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், வேதாந்தம், சைவசித்தாந்தம் போன்றவை வைதீக தத்துவங்கள் என்றும் பௌத்தம், சமணம், உலகாயுதம் போன்றவை அவைதீக தத்துவங்கள் எனவும் அழைப்பர். இவற்றுள் இறுதி நிலைப்பட்டதாகவும் சிறந்த முறையியல்சார் அமைப்பைக் கொண்டதாகவும் சைவசித்தாந்தம் விளங்குகின்றது. சைவசித்தாந்தம் என்பது சைவத்தின் முடிந்த முடிபைக் கூறுவதென்று பொருள் கொள்வர். இது முப்பொருள் உண்மையை காரணகாரிய அடிப்படையில் நிறுவுகின்ற மெய்யியலாக விளங்குகின்றது. சைவசித்தாந்தம் தனக்கான தோற்ற வேரினை வேதகாலத்திலிருந்து கொண்டிருந்தாலும் தெளிவான கருத்தமைவுகளை பன்னிரு திருமுறைகளிலும் மெய்கண்டசாத்திரங்களிலும் கண்டுகொள்ளலாம். சைவசித்தாந்தமானது ஒரு முழுமை பெற்ற தருக்கியல் அமைப்பிற்குட்பட்ட மெய்யியலாக இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. பௌத்த மெய்யியலானது வேத உபநிடதங்களை நிராகரித்து அக்கால சடங்கு முறைகளில் வெறுப்புக் கொண்டனவாகவும்இ நிலையாமைத் தத்துவத்தில் அதிக ஈடுபாடு கொண்டதொன்றாகவும் காணப்பட்டது. வேத உபநிடத கருத்துக்களுக்கு எதிர் நிலையானதும் மற்றும் நிலையாமை தத்துவத்தைக் கொண்டு காணப்படுகின்ற பௌத்தம் குறிப்பிடும் ஒழுக்கவியல் குறித்த கருத்தமைவானது ஏனைய வைதீக தத்துவங்கள் கூறுகின்ற ஒழுக்கவியல் கோட்பாடுகளோடு நுணுக்கமாக ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டிய நிலைப்பாடுடையதாக காணப்படுகின்றது. ஒழுக்கம் என்பது அறம், நெறி, தர்மம் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. இதன் வழி நடப்பதனால் விடுதலை கிடைக்கும் என்பது சைவசித்தாந்த பௌத்த மெய்யியல்களின் பொதுவான கருத்தாகும். இவ்வாறு இரண்டு தத்துவங்களும் ஒழுக்கவியல் பற்றிய கருத்தை குறிப்பிடும் அதேவேளை இரண்டினதும் இறுதி இலக்கான விடுதலை என்ற நோக்கில் ஒன்றாகவே காணப்படுகிறது. எனவே சைவசித்தாந்தம் குறிப்பிடும் ஒழுக்கவியல் கோட்பாட்டிற்கும் பௌத்தம் குறிப்பிடும் ஒழுக்கவியல் கோட்பாட்டிற்குமிடையே மிக ஆழமாக ஆராய்ந்து பார்க்க வேண்டியதுமான ஒற்றுமைப்பாடுகள் இடம்பெறவே செய்கின்றன. ஆகவே சைவசித்தாந்தத்தினதும் பௌத்தத்தினதும் வாழ்வியல் வடிவமைப்புக்களும் இலக்குகளும் ஒழுக்கக்கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு ஏகபாதையிலே பயணிக்கிறது என்பதனையும் ஒழுக்கத்தைக்*

*கடைப்பிடிப்பதன் மூலமே விடுதலை கிடைக்கும் என்பதனையும் வெளிக்கொணர்தல் வேண்டும் எனும் நோக்கில் சில முதல்நிலை இரண்டாம் நிலைத் தரவுகளையும் அடிப்படையாக கொண்டு பகுப்பாய்வு முறை, ஒப்பீட்டாய்வு முறை ஆகிய முறைகளினூடாக இவ்வாய்வு பூரணப்படுத்தப்படுகிறது.*

**பிரதான சொற்கள்:** *பௌத்தம், சைவசித்தாந்தம், ஒழுக்கவியல், இல்லறம், விடுதலை*

## 1. அறிமுகம்

இந்திய மெய்யியல் சிந்தனையானது தனக்கென ஒரு வரலாற்று பாரம்பரியத்தினை உடையது. இத்தத்துவமானது மேலைத்தேய போக்கினின்றும் வேறுபட்ட வகையில் தனித்துவமான ஒரு போக்கினை கொண்டு விளங்குகின்றது. தனது ஆற்றலுக்கு மேலாக நின்று, தன்னை வழிநாடத்தும் சக்தியை இனங்காணவேண்டும் என்கிற வேட்கையானது, ஒவ்வொரு மனிதனுக்கு இயல்பாகவே அமைந்துள்ள உணர்வாகின்றது. உண்மையின் இயல்புதான் என்ன? மனித அனுபவங்களின் விளைவுதானென்ன? இன்பதுன்ப அலைகளின் அடிப்படைதானென்ன? மனித விடுதலை எதனால் சாத்தியம்? என்பவை இவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும். இவ்விதம் குறித்த வினாக்களுக்கு விடையிறுத்தலின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடுகளில் ஒன்றே சைவசித்தாந்தமாகும்.

சைவசித்தாந்தத்தின் முன்னோடிக் கருத்துக்கள் கி.பி 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்திலிருந்தே காணப்பட்டாலும் எழுத்து மூலமான சான்றுகள் வேதகாலத்தில் இருந்தே கிடைக்கப்பெற்று இருக்கின்றன. இந்தவகையில் வேத உபநிடதங்கள், ஆகமங்கள், திருமுறைகளில் சைவசித்தாந்தத்திற்கு உவப்பான கருத்துக்கள் காணப்பட்டாலும் சிறப்பாக பதின்னான்கு மெய்கண்ட சாத்திரங்களின் வழி ஒரு கோட்பாட்டுத்தளத்தை அடைந்து காணப்படுகின்றது. அத்துடன் வாகீசரின் ஞானாமிர்தம், அ்'ட்ப்பிரகரணங்கள், பண்டார சாத்திரங்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. சைவசித்தாந்த தத்துவமானது மேலைத்தேய தத்துவங்கள் போல வெறும் தத்துவங்களாக மட்டுமன்றி, வாழ்வியல் நெறியாகவும், சமயதத்துவமாகவும், ஆன்மீகத்திற்கு அழுத்தம் கொடுப்பதாகவும் விளங்குகின்றது இந்த வகையில் இந்திய மெய்யில் பரப்பினுள் தனக்கென தனி இடத்தையும், முக்கியத்துவத்தையும் தனித்துவமான வரலாற்று பாரம்பரியத்தையும் உடையதாக சைவசித்தாந்தம் விளங்குகின்றது. முப்பொருட்கோட்பாட்டின் ஊடாக மனித வாழ்வின் நோக்கினையும் வாழ்வில் பெறவல்லதான உயர்நிலையையும் எடுத்துக் காட்டுவதுடன் அவற்றை பெறுவதில் உள்ள இடர்பாடுகளைச் சுட்டி நிலையான பேரின்பப் பெருவாழ்விற்கு வழிகாட்டும் நெறியாக விளங்குகின்றது.

இந்தியாவிலே வேதமரபுக்கு புறம்பாகத்தோன்றிய தத்துவ சிந்தனைகளில் ஒன்றாக பௌத்தம் விளங்குகின்றது. சடங்குகளும் சம்பிரதாயங்களும் வேள்விகளும் வேதங்களுமே மனிதனை உய்விக்கும் என்ற நம்பிக்கை மிகுந்திருந்த காலத்தில் புத்தபிரான் அவதரித்தார். பௌத்தம் தோன்றிய சூழலானது பிராமணத்தினது கடும் போக்குத் தன்மை பௌத்தத்தின் உதயத்திற்கு வழிகோலியது. ஏழை மக்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களின் மன உளைச்சலுக்கும் பௌத்தத்தின் போதனைகள் ஒரு மாற்று மருந்தாக அமைந்தன. அன்றைய சமூகப் பொருளாதாரச் சூழலும் பௌத்தத்தின் எழுச்சியில் பக்கபலமாக நின்று உரமூட்டியது. இத்தகைய பின்னணியில் தோன்றிய பௌத்தம் ஒடுக்கப்பட்ட மக்களின் பெருமூச்சாக வெளிப்பட்டது. இவ்வாறு தோற்றம் பெற்ற பௌத்தத்தின் ஆரம்ப கர்த்தா "கௌதம புத்தர்" என அறிஞர்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

ஆனால் அவருக்கு முன்னரே புத்த மதம் இருந்தது. என கருத இடமுண்டு கௌதம புத்தரே நமக்கு முன் வாழ்ந்த புத்தர்களை பற்றிக் கூறியுள்ளார் . இதனை வெறும் குறியீட்டுப் பொருளில் மட்டும் எடுத்துக் கொள்ள முடியாது. தாமரைச் சூத்திரம் போதிக்கும் மூலபுத்தர் என்ற நுட்பமான பகுப்பினையும் இங்கே மனதில் கொள்ள வேண்டும். கௌதம புத்தருக்கு முன் வாழ்ந்த புத்தர்களில் 24 புத்தர்கள் புகழ்பெற்றவர்கள் எனக் கூறப்படுகின்றது. இதனை

> "இறந்த காலத் தெண்ணில்புத் தாசரும்
> சிறந்தருள் கூர்ந்து திருவாய் பொழிந்தது."[1]

என மணிமேகலை கூறியது. ஆனால் நாமறிந்த புத்தமதம் கௌதம புத்தரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை.

புத்தர் உயிர் என்ற பொருள் இல்லை நிலையானதாக இல்லை என்று கருதியவர். இதனால் பௌத்தத்திற்கு அனாத்மவாதம் என்றொரு பெயரும் உண்டு. மேலும் பௌத்தமானது கடவுள் உண்டென்பதை மறுக்கின்றது. புத்தர் உயிர்க்கொலையை கண்டிப்பவர் என்றவகையில் உயிர்ப்பலியோடு கூடிய வேத வேள்வி முறைகளை எதிர்ப்பவர். திக நியாயத்திலே சோண தண்ட சூத்திரம் என்ற பகுதியில் உயிர்க்கொலை அற்ற ஒரு வேள்வி பற்றி குறிப்பிட்டுள்ளார். அந்தவகையில் சைவசித்தாந்த பௌத்த மெய்யியல்களில் காணப்படும் ஒழுக்கவியல் குறித்த கருத்துக்களை ஒப்பிட்டு மதிப்பிடுவதாக இவ்வாய்வு அமைகின்றது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

சைவசித்தாந்தம் குறிப்பிடும் ஒழுக்கவியல் கருத்துக்களையும் பௌத்தம் குறிப்பிடும் ஒழுக்கவியல் கருத்துக்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்து அதில் காணப்படும் ஒத்த தன்மைகளை வெளிப்படுத்துவதும் அதனூடாக அவற்றின் இறுதி இலக்கினை கண்டறிவதும் இவ்வாய்வின் பிரச்சினைக்குரிய விடயமாகும்.

## 3. ஆய்வின் நோக்கம்

இருவேறுபட்ட வாழ்வியல் வடிவமைப்புக்களைக் கொண்ட தத்துவப்பிரிவுகளிலும் காணப்படும் ஒழுக்கவியல் தொடர்பான ஒத்த கருத்துக்களை வெளிக் கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## 4. ஆய்வின் முறையியல்

இவ்வாய்வின் நோக்கத்தினை நேர்த்தியான முறையில் வடிவமைப்பதற்கு வரலாற்றாய்வு முறை, பகுப்பாய்வு முறை மற்றும் ஒப்பீட்டாய்வு முறை என்பன பயன்படுத்தப்படுவதோடு இவ்வாய்வுக்கு வேண்டிய தரவுகள் யாவும் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளாகப் பெறப்பட்டு இவ்வாய்வு பூரணப்படுத்தப்படுகின்றது.

## 5. ஆய்வின் முக்கியத்துவம்

இவ்வாய்வுப் பெறுகையானது இந்திய தத்துவப்பரப்பில் ஒழுக்கவியல் எனும் எண்ணக்கரு தொடர்பாக இனிவரும் காலங்களில் மேலதிக ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கு ஓர் முன்வழிகாட்டியாகவும் ஆன்மீக ரீதியாக தன்னை ஈடுபடுத்திக் கொள்பவர்க்கு இதுதொடர்பான அறிவானது மேலும் பல நல்ல செயல்களைச் செய்யத் தூண்டுகோலாகவும், நன்மை - தீமை என்பனவற்றை வரையறை செய்துகொள்ளவும், இலங்கை போன்ற பன்மறை சமய சூழலில் வேறுபட்ட சமயங்களுக்கிடையிலான ஒழுக்கக் கொள்கைகளை ஆராய்வதனால் சமயங்களுக்கிடையே உள்ள வேற்றுமைகளைக்

கழைந்து ஒற்றுமைகளைக் வெளிக் கொணர்ந்து சமூக நல்லிணக்கத்தை வளர்த்துக் கொள்ளவும் உதவும்.

## 6. ஆய்வின் வரையறை

இவ்வாய்வானது பௌத்தம் மற்றும் சைவசித்தாந்தத்தில் குறிப்பிடப்படும் ஒழுக்க கருத்தக்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஒரு வரையறைக்குள் உட்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது.

## 7. ஆய்வு தொடர்பான விவாதங்களும் ஒப்பீடுகளும்

### அ. சைவசித்தாந்தத்தில் ஒழுக்கவியல்

முப்பொருள் உண்மையை விளக்கி நிற்பதன் ஊடாக மனித வாழ்வின் விழுமியத்தை தெளிவுபடுத்தி சமயம் சார் நெறிமுறையை வாழ்க்கையை சைவசித்தாந்தம் முன்மொழிகின்றது. எமது நடத்தைகள் நல்லனவாகவும் கெட்டனவாகவும் அமைகின்றன. இதனால் செயல்கள் நல்லொழுக்கமாய் தீயொழுக்கமாய் எடுத்தாளப்படுகின்றன. ஒழுக்கத்தை முதன்மையாகக் கொண்டு எச்செயலையும் நற்செயலாக வழிப்படுத்தப் பலவழிகள் சித்தாந்தத்தில் கூறப்படுகின்றது.

ஒழுக்கத்தின் முதன்மை கருதியே வள்ளுவரும்

> 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப்படும்'[2] எனக்குறிப்பிட்டுள்ளார்.
> ஒழுக்க வாழ்வின் உயர்வு கருதியே சுந்தரமூர்த்தி நாயனாரும்
>
> 'வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
> பாழ் போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்
> தாழாது அறஞ்செய்மின்'[3] எனக்கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

சித்தாந்திகள் ஆத்மாவை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையை இம்மை வாழ்வு - இவ்வுலக வாழ்வு, மறுமைவாழ்வு - மறுவுலக வாழ்வு என இரண்டாகப் பிரிப்பர். இதில் இம்மை வாழ்வினை பொதுவாக இல்லற வாழ்வு, துறவற வாழ்வு எனப் பகுத்துரைத்தல் வழமையாகும். உலகியல் இன்பத்துள் ஈடுபட்டு குடும்ப வயப்பட்ட வாழ்வாக இல்லற வாழ்வு திகழ பந்தபாசங்களை அறுத்து இறைதேடலில் முழுமையாக ஈடுபடும் வாழ்வு துறவற வாழ்வாக அமைகின்றது. ஒவ்வொருவரும் தத்தமது இலட்சியத்தை அடைய நல்வாழ்வை வாழ வையத்துள் வாழ்வாங்கு வாழ மண்ணில் நல்ல வண்ணம் வாழ சைவசித்தாந்தம் வழிகாட்டுகின்றது.

### இல்லறமும் ஒழுக்கநிலையும்

வாழ்க்கையை அர்த்தமுடையதாக்குவதற்கு சைவசித்தாந்திகள் நான்கு புருடார்த்தங்களை எடுத்துரைக்கின்றார்கள் அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். இவற்றுள் முதலாவதாக அமைவது அறம் ஆகும். மனத்தின் கண் மாசிலன் ஆகவிருத்தல் அறம் எனப்படுகின்றது. சாதாரண ஒழுக்கம் அன்புஇ அருள்இ ஆசாரம்இ உபசாரம் முதலாக இன்னும் பல பொதுவொழுக்கம் எனப்படுகின்றது. இதனை சிவஞானசித்தியாரில் அருணந்தி சிவாச்சாரியார்

> 'ஒழுக்கம் அன்பு அருள் ஆசார உறவு சீலம்.............
> இழுக்கிலா அறங்களானால் இரங்குவான் பணியறங்கள்'[4]

என விதந்துரைத்துள்ளார்.

சிறப்பொழுக்கமாவது இறையருளாற்றலை ஒரு நெறிய மனம் வைத்து உணர்த்து தலைப்பட்டு அவன் அருட் குணங்களுள் தோய்ந்து முடிவில் அவன் வண்ணமாய் ஒன்றுதற்கு முயலுதலாகும். இவ்விரு ஒழுக்கங்களும் நல்லொழுக்கங்கள் ஆகும். இதற்கு எதிர்மாறானது தீயொழுக்கங்கள் ஆகும். நன்றிக்கு வித்தாக நல்லொழுக்கம் திகழ தீயொழுக்கம் என்றும் துன்பத்தைத் தரும்.

அடுத்து உலக வாழ்வின் ஆதார சுருதியாக அடிநாதமாக விளங்குகின்ற அன்பு எனும் உணர்வை சுட்டலாம். சைவ சித்தாந்தம் இறைவனை அன்புருவானவன் அன்பே சிவம் என கூறுகின்றது. இதனைத் திருமூலர்

> 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்......
> அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே' [5] எனவும்

அருணந்திசிவாச்சாரியர்

> "ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
> எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார் ...."[6]

எனவும் கூறியிருப்பதன் ஊடாக தெளிவுபடுத்தப்படுகின்றது.

அந்த வகையில் அன்பினை ஊனினை உருக்கி உளம் நெய்க்கு விட்டு உருக உருக இறைவன் மேற்செலுத்த வேண்டும். எல்லா ஜீவன்களிலும் இறைவன் இருக்கின்றான் என்பது சைவசித்தாந்த கொள்கை ஆகும். அந்த வகையில் தாம் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். நாம் உண்ணும் போது பசுவிற்கு ஒரு வாயுறையும் மாந்தர்க்கு ஒருகைப்பிடி உணவும் உரையாடும் போது இன்னுரையும் பேச வேண்டும். எவ்வுயிரும் நீங்கா துறையும் இறை சிவனென்று எவ்வுயிர்கும் அன்பாய் இரு என்பது அடிப்படைவிதி ஆகும். இதனை சிவஞான போத நூற்பாயிர அவையடக்கம்.

> 'தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வான்..........
> புணராமை கேளாம் புறம்'[7] எனக் குறிப்பிடுகின்றது.

அன்பும் அறிவும் அடக்கமுமாய் நிற்கும். என திருமூலர் கூறுகின்றார். வாழ்வின் உயரிய இலட்சியத்தை அடைய என்பதே மாந்தரின் உள்ளத்துள் இலகுவில் சுரக்கவல்ல சுரப்பு அன்றி ஊற்று இதுவெனலாம். கள்ளுண்டு வாழ்வில் மொத்துண்டு மரிப்பதை மறுத்து உரைக்கின்றது சைவசித்தாந்த நூல்கள்.

> 'வாமத்தோர் தாமும் மதுவுண்டு மாள்வர்
> கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறியாரே'[8] எனப் பலவாறு திருமூலர் கூறுகின்றார்.

இவை யாவற்றுள்ளும் இன்னும் கீழ்மையானது பிறன் இல் விளைதல் ஆகும். மாற்றார் மனைவியை தவறான எண்ணத்துடன் நாடுதல் ஆகும். பிறன்மனை நோக்காத பேராண்மை என்பது அறம் மட்டுமல்ல ஒழுக்கத்தின் சிகரமும் ஆகும். மற்றும் பிறர் பொருளை அபகரித்தல் தவறு என சைவசித்தாந்தம் கூறி நிற்கின்றது. தவிர ஒருவன் நடுநிலையை பேண வேண்டும். அப்போது தான் அவன் ஞானத்தை சொர்க்கத்தை பெறத் தகுதியுள்ளவனாவான் என திருமந்திரம் உரைக்கின்றது.

மனித வாழ்வில் அடையத்தக்கவையாக தர்மம் சுட்டப்பெறுகின்றது. தர்மம் முறையான நடத்தையை சுட்டுவதாகும். மனுஇ சுக்கிராச்சாரியார் போன்றோருகும். தர்மம் பற்றி விளக்கியிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும். தர்மமானது நடத்தைகளை ஒழுங்குபடுத்தி சமூக வாழ்வினதும் ஆன்மீகவாழ்வினதும் உயர்வுக்கு வழி வகுக்கின்றது. தர்மம் வர்ண தர்மமஇ ஆச்சிரம தர்மம் என இரண்டாக விளக்கப்படுகின்றது. வர்ணதர்மமானது சமூக நிலை சார்ந்த நிலைப்பாடாகவும் கருதத்தக்கது. வர்ண தர்மம் வருணம் எனும் நிறத்தை அடிப்படையாகக்கொண்டெழுந்ததெனக் கூறப்படுவதை நாம் அவதானிக்கலாம்.

தர்மங்கள் செய்ய வேண்டும் என்பதையும் சைவசித்தாந்தம் "தர்மம் ரட்சிதோ ரட்ஈதி.." என வற்புறுத்தி நிற்கிறது. தானம் கொடுக்க வேண்டும் என்ற செய்தியும் காணப்படுகின்றது. இதனைத் திருமந்திரம்

> "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
> யாவர்க்கமாம் உண்ணும் போது ஒரு வாயுறை…"[9]

என்று கூறுகின்றது. மற்றும் உண்மை பேச வேண்டும். தாய் தந்தையரை தெய்வமாகப் போற்ற வேண்டும். குருவைத் தெய்வமாகப் போற்ற வேண்டும் என சைவசித்தாந்த வாழ்வியல் எடுத்துக் கூறுகின்றது. அதாவது தர்மம் சர, தத்துவம் சர, மாத்திரு தேவோபவ, பித்துரு தேவோபவ, அதிதி தேவோபவ, ஆச்சாரிய தேவோ பவ, என்று சைவசித்தாந்த அடிப்படை நூலான உபநிடதங்களிலே காணப்படுகின்றன.[10] இச்செல்நெறியிலே சம்பந்தரும் "அன்புள்ள மாமனும் மாமியும் நீ…"[11] என்று பாடி உறவு நிலைகளிற்கிடையிலான அன்பின் வழி நல்லிணக்கத்தின் வழி ஒழுக்கவியலுக்கு வலுச் சேர்த்திருக்கின்றமையானது இதற்குத்தக்க எடுத்துக்காட்டுக்கள் ஆகும். எனவே உபநிடதங்களில் கருத்தைத் சைவசித்தாந்தம் தெளிவுபடுத்துவதால் வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத்திறன் என்று கூறப்படுகின்றது.

தனிமனித வாழ்வின் முறைமையாக ஆச்சிரம தர்மம் அமைந்தது பிரமச்சரியம்இ இல்லறம்இ வானபபிச்தம்இ சந்நியாசம் எனும் நான்கு நிலைகளே இவ் ஆச்சிரம தர்மத்தில் அடங்கும் பிரமச்சாரியானவன் மணவ பருவத்தே குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியைக் குருவினிடத்துக் கழித்து உரிய போதனைகளைப் பெற்றுக் கொள்கின்றான். உளநிலை நோக்கில் மனித சிந்தனைகளை வளம்படுத்தி நல்ல முறையில் அவற்றைப்பயன்படுத்துவதற்குரிய பருவமாகும். இரண்டாவதான நிலை இல்வாழ்க்கையாகும். வாழ்க்கைக்கு ஒரு துணைவியைப் பெற்று அந்த இல்லாளுடன் கூடி நல்லதொரு வாழ்க்கை வாழ்ந்து காட்டும் நிலையாகும்.

சைவசித்தாந்தமானது கன்மம், கன்ம மறுபிறப்பு பற்றிக் கூறி நல்ல செயல் செய்பவன் நல்லபிறவியையும் தீய செயல் செய்பவன் கீழான பிறவியையும் அடைவான் என்று கூறி கன்மக்கோட்பாட்டைக் கட்டமைத்திருப்பதன் வழி மக்கள் மனம், மொழி, மெய்களால் நல்ல செயல்களை மட்டும் செய்வதால் சமூகத்திலும், ஆன்மீகத்திலும் நல்ல இணக்கம் ஏற்படுவதற்கும் நல்ல சிந்தனை அவர்களுடைய மனதில் முளை விடுவதற்கும் சித்தாந்த ஒழுக்க வாழ்வியல் அடிப்படையாக இருக்கிறது. இந்தவகையில் உலக ஆபாசத்துள் உழலும் பாமர மக்கள் தொடக்கம் கற்றவர்கள் வரை எல்லா மனிதர்களாலும் தம்மால் இயன்றவரை நமது அனைத்து துன்பநிலையிலும் நின்றும் கூட இறைவனை வழிபடுவதற்குரிய வாழ்வியல் தளத்தை சைவசித்தாந்தம் கூறும் இல்லற ஒழுக்க சிந்தனை வழி ஏற்படுத்திக்கொடுக்கின்றது.

**துறவறமும் ஒழுக்கநிலையும்**

துறவறம் என்பது துறவிகளுக்கு விதித்துள்ள தர்மம் எனக் கூறப்படுகின்றது. எனவே சந்நியாசி பற்றுக்களினை விடுத்து சநிநியாசம் புகும் முறையே துறவறம் என தமிழ் பேரகராதி குறிப்பிடுகின்றது. இத்துறவற நிலைகளின் படிநிலையாக அமைந்து விளங்குவது ஆச்சிரமதர்ம ஒழுக்கமே ஆகும்.

ஆச்சிரமம் என்பது வாழ்க்கை ஒழுங்கு அல்லது படிமுறைகள் இது சிறப்பாகப் பிராமணருக்குரியது. பிரமச்சரியம், கிருகதம், வானப்பிரதம், சந்நியாசம் எனும் நான்கு கட்டங்களையுடையது என அறியலாம்.

**ஆ. பௌத்தத்தில் ஒழுக்கவியல்**

மூப்பு, பிணி, சாக்காடு என்ற மூன்றைப் பற்றியும் உணர்ந்து கௌதம புத்தரால் ஆக்கப்பட்ட தத்தவமே பௌத்தம் ஆகும். பௌத்தத்தில் புத்தர் பின்வரும் முக்கிய அம்சங்களை நோக்குகின்றார். வாழ்வின் ஓட்டம், ஒழுக்கம், பரிநர்வாண வழி அன்பு நெறி என்பவை ஆகும். இவை எல்லாம் முக்கியமாக ஒழுக்கத்தையே வற்புறுத்துகின்றன.

ஒழுக்கங்களை இல்லறத்தார்க்குரிய ஒழுக்கமாக பஞ்ச சீலங்களும் துறவறத்தார்க்குரிய ஒழுக்கமாக அட்டசீலமும் நிர்பாணத்துக்குரிய ஒழுக்கமாக தச சீலங்களும் கூறப்பட்டாலும் பஞ்சசீலம் யாவர்க்கும் உரியதாகவே பௌத்தர்கள் எடுத்தாள்வர். ஆனால் அட்டசீலம், தசசீலம் முதலியன துறவிகளுக்கும் பரிநிர்வான நிலைக்கு அண்மித்தோருக்கு மட்டுமே உரியவை. அந்தவகையில் பௌத்த ஒழுக்கவியலை இல்லறத்தாருக்குரிய ஒழுக்கம், துறவறத்தாருக்குரிய ஒழுக்கம் என இருவகையில் வைத்து நோக்கமுடியும்.

**இல்லறத்தில் ஒழுக்கவியல்.**

நாள்தோறும் திரிசரணம் முடித்து ஐவகை சீலங்களையும் பின்பற்றி வருதல் இல்லற கடமையாகும். பிடகங்களில் பஞ்சசீலம் என்ற குறியீட்டினால் கொல்லாமை, கனவு, கள்ளாமை, காமமின்மை, பொய்யாமை முதலியவை கூறப்படுகின்றன. இவற்றை சிக்காபதம் எனவும் பாலி நூல்கள் குறிப்பிடுகின்றன. மகாயன பௌத்த நூல்களில் சிக்காபதானி எனச் சுட்டப்பெறும் சீலங்களும் இவையேயாகும். பஞ்சசீல ஒழுக்கம் பற்றி பாடல் ஒன்றில்

"கள்ளும் பொய்யும் காமமும் கொலையும் உள்ளக்
கனவு மென்றுரவோர் துறந்தவை"

'சீலம் நீங்கச் செய்தவர்க்கு
சீலம் தாங்கி தானம் தலை நின்று'[12]

எனவும் கூறப்படும்.

மேலும் இங்கே சீலம் பற்றிக் கூறும் போது சீலம் என்பது மாசற்றதும், ஒளிமயமானதும் ஆன மணியுடன் ஒப்பிடுவதை சத்தரும புண்டரீகம், சுகாவதி வியூகம், மகாவத்து போன்ற மகாயான பௌத்த நூல்கள் சிறப்பித்துக் கூறும்.

**கொல்லாமை**

கொல்லாமை பற்றிக் கூறும் போது பிற உயிர்கள் கொல்லப்படக் கூடாது தம் உயிர் போல் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு பௌத்தனும்

"பானாதி பாதா வெரமணி
சிக்காபதம் சமாதியாமி"

இத்தொடருக்கு கொல்லாமை எனும் சீலத்தை கடைப்பிடித்தலைக் காட்டும். புத்தர் வேள்வியில் உயிர்(விலங்குகள்) பலியிடுவதை கடுமையாகக் கண்டிக்கிறார். தானே புலிக்கு உணவாகச் சென்று அவர் புலியினால் கொல்லப்படாமை அவருடைய அகிம்சா தர்மத்திற்கு எடுத்துக் காட்டாகும். புலால் உண்ணுதல் பாவம் பிறர் கொன்றதையோ அல்லது இயற்கையாக இறந்ததையோ உண்டால் பாவம் என்பர் புத்தர்.

**கள்ளாமை**

தனக்கு தானமாக வழங்கப்படாததை கவர்தல் குற்றமாகும். ஆள் வலிமையாலும், தோல் வலிமையாலும் வன்முறைகளைப்பயன்படுத்தி பிறர் பொருள்களைக் கவருதல் பழிச்செயலாகும். அதனால் பௌத்தர்கள் ஒவ்வொருவரும் பொதுநலம் கருதி 'அதின்னா தான வெரமணல் சிக்காபதம் மாதியாம்' எனும் தொடருக்கு கொடுக்கப்படாததை எடுக்கமாட்டேன் என்பது கருத்தாகும் எனும் சீலத்தினை கடைப்பிடித்தல் மரபாகவுள்ளது. மேலும் புத்தர் களவினைத் தொழிலாகக் கொண்டு வாழ்பவர் கடும் துயர் உறுவர் எனக் குறிப்பிடுகின்றார். இதனைச் சாத்தனார் கூறும் போது 'பொய்யற்றொழுக்கம் கடந்ததும் உண்டோ'எனக் குறிப்பிடுகின்றார்.

**காமமின்மை**

பௌத்தமானது காமமின்மை பற்றிக் கூறும் போது காமேசு மிச்சாசார வெரமணி சிக்கா பதம் காமச்செயல்களில் (தகாத செயல்களை) தவிர்த்தல் எனும் சீலத்தை மேற்கொள்கின்றேன் என்று கூறப்படுகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி. ஒருத்திக்கு ஒருவன் என்ற எல்லையில் வாழ்க்கை நடத்துதல் நன்றென்றும் புத்தர் வரையறுத்தார். காமவெளி உடையவர் மறுபிறவியில் பல துன்பம் அடைவர் எனவும் பௌத்தம் கூறுகின்றது.

புத்தரின் முதன்மை சீடருள் ஒருவரான பிண்டோல பரத்துவாசர் உதயணன் என்னும் அரசனுடன் உரையாடுங்கால் பிறர் பெண்டிரை மூன்று வகைகளில் நோக்குமாறு புத்தர் தெருட்டிய திறத்தை விரித்துக் கூறினார்.

"தம் தாய் போலும் மூத்த பெண்டிரைத் தாயாராகவும்.தம் தங்கை தமக்கையர் போலும் பருவம் வாய்ந்த மகளிரை தங்கை தமக்கையராகவும். தம் புதல்வியர் போலும் இளைய வயதினரைப் புதல்வியராகவும் போற்றுதல் வேண்டும்". என்பதே புத்தரின் எண்ணம். இதனை சம்புத்த நிகாயம் எனும் சுத்தபிடக பகுதி தெளிவுபடுத்துகின்றது. கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் அன்பு பாராட்டி வஞ்சிக்காது நம்பிக்கைக்குரியவராய் வாழ்க்கை நடத்த வேண்டும் எனப் புத்தர் புகட்டினார். இதனை தீக நிகாயம் என்னும் சுத்த பிடகப்பகுதி எடுத்துரைப்பதாக பௌத்தம் எனும் நூலில் கந்தசாமி குறிப்பிடுகின்றார்.[13]

**பொய் பேசாமை**

பொய்யாமை பற்றிக் குறிப்பிடும் போது மெய்ப்பொருள் கண்ட புத்தர் பிரான் பொய்யாமையினை பெருவருஞ்சீலமாக போற்றினார். பாலியில் 'முசாவாதா வெரமணீ' இத்தொடருக்கு பொய்யரையின் நீங்குதல் என்பது பொருளாகும். உண்மையினை மறைத்தலும் நாவன்மையால் பொய்மை மெய்போல் பேசுதலும் உயர்வு நவிற்சியும் பொய்யின் வெவ்வேறு வடிவங்களாகும்.

தம்ம பதமானது இதனைக் குறிப்பிடுகையில் என மொழிகிறது. உண்மையே பேசுதல் சினத்துக்கு ஆளாகாமை இரப்போர்க்கு சிறிதேனும் ஈதல் இம்மூன்றும் தேவர் திருமுன்னர் உய்க்கும் உபாயங்களாகச் சொல்லப்படுகின்றது.

ஊதியம் கருதியோ அச்சம் காரணமாகவோ ஒருவன் பொய் பேசலாம். ஆனால் உண்மையுடன் உறவு கொண்டு மன உறுதி பெற்றுள்ள ஒருவன் பொய் பேசுவதற்கு

ஒருப்படான். எல்லா நெறிகளும் பொய்மையினைக் கடிந்தன. அதனை சீலத்தொகுதியில் ஒரு உறுப்பாக புத்தர் எண்ணினார்.

**கள்ளுண்ணாமை**

கள்ளுண்ணாமை எனும் ஒழுக்கமும் பஞ்சசீலங்களில் ஒன்றாக வரையறுக்கப்படுகின்றது. கள்ளுண்ணாமை என்பது 'சுரா மெரய மஞ்ஞா பமா தட்டாணா வெரமண' எனும் தொடருக்கு மயக்கத்தையும் மடிமையினையும் பயக்கும் கள் வகையை தவிர்த்தல் வேண்டும் என்பது பொருளாகும். சோமபானமஇ சுராபானங்கள் பருகுதல் வேத காலப் பிராமணரின் வழக்கமாய் இருந்தன. முதல் எவ்வகை மாந்தரும் கள் பருகுதல் கூடாது என்ற ஒழுக்கங் கூறிய ஆன்றோர் புத்தரே எனலாம்.

பௌத்த நெறி துறவிகளை மட்டும் உருவாக்கும் என்று எண்ணுதல் ஏற்றதன்று விநயபீடத்தில் துறவிகளுக்குரிய இலக்கணங்களை வகுத்த புத்தர் சுத்த பீடகத்தின் பல பகுதிகளிலும் இல்லறத்துக்குரிய கடைமைகளையும் ஒழுங்குகளையும் இயல்புகளையும் விரிவாக விளக்கியுள்ளார். பெற்றோரைப் பேணுதல், மனைவி மக்களுடன் மகிழ்ச்சியுற்றிருத்தல்இ சுற்றம் தழுவுதல் என்பன பெறலரும் பேறாகும்

சிற்றினம் சேராமைஇ பெரியோரை துணைக்கோடலும்இ மதிக்கத்தக்கோரை மதித்தலும் தக்க இடத்தில் வாழ்தலும் சிறந்தன. புரிதலும் கலைகளில் தேர்ச்சி பெறுதலும் ஒழுக்கத்தில் நன்கு பயிற்சி பெறுதலும் இனியன பகர்தலும் ஈகை புரிதலும் பௌத்த தருமத்தை கடைப்பிடித்தலும் குற்றம் இன்மையும் தீவினை புரியாமையும் கள்ளுண்ணாமையும் தன்னடக்கமும் நன்றியுணர்தலும் மனநிறைவு பெறுதலும் பொறாமையுடமையும் இன்னோரன்ன சிறந்த இயல்புகளால் ஒருவன் பெறலரும் பேறு எய்தலாம்.

இல்லறத்தோர் பெற்றோருக்கும் அரசனுக்கும் சமுதாயத்துக்கும் புத்த தரும சங்கம் எனும் மும்மணிகளுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் இடம்பெற்றுள்ளன. மக்களுக்கும் பெற்றோருக்கும் உள்ள கட்டுப்பாடு அரசனுக்கும் குடிமக்களுகடகும் உள்ள தொடர்பு முதலியன இல்லறத்தாருக்கும் மும்மணிகளுக்குமிடையே இருத்தற்குரிய ஈடுபாடும் வலியுருத்தப்பெற்றுள்ளன. இத்தொடர்கள் அனைத்தும் பெற்றோர்கட்கும் பிள்ளைகட்கும் உள்ள உறவினை ஒத்து இயங்குதல் வேண்டும் என புத்த தருமம் கூறுகின்றது. நாட்டு மக்களை குழந்தைகளாகவும் அரசனை தாயாகவும் உறவு கற்பித்தலை

'நீயொழி காலை நின்னாடெல்லாம்
தாயொழி குவைி போலக் கூ உம்
புன் கண் கொள்ளல் நீ போந்ததற் கிரங்கி நின்
மன்பெரு நாடு வாயெடுத் தழைக்கும்'[14]

பெற்றோருக்கு மதிப்பளித்தல் எனும் ஒழுக்கமானது பெற்றோரைக் கடவுள் போல மதித்தலைக்குறிக்கும். கடவுள் போல் மதிப்பவன் பிரமனுக்கு நிகரானவன் பெற்றோரை வழிபடுபவன் இம்மை மறுமை உலகில் இன்பம் அடைவான் அதாவது அங்குதல் நிகாயமானது இவர்ககைப் பேணுவோர் இம்மையில் புகழும் மறுமையில் வானுலகமும் பெறுவர் என சுத்தபிடகப்பகுதிகள் சுட்டுகின்றன.

பிறரை இகழாமையும் முக்கிய ஒழுக்கமாகும். அதாவது பிறரை தன்போல் மதிக்க வேண்டும். அடுத்து சூதாடாமை முக்கிய ஒழுக்கமாக கூறப்படுகின்றது. முதல் முதலிலே ஒழுக்கமற்ற செயலாக சூதாடுதலைக் கூறியவர் புத்தர் ஆவார். வள்ளுவர் சூது என்னும்

அதிகாரத்தில் இக்கொடிய பழக்கத்தை கடிதல் காணத்தக்கது. வைதீகநெறியில் பாரத சூதாட்டம் அழிவையே இட்டது. சூதாடுதல் கொடிய விடம் என பௌத்தம் கூறுகின்றது. இதைவிட அரசர் கடமை மக்களுக்கு பாதுகாப்பளித்தல் மக்களை மகிழ்வித்தல் அரசர் ஆட்சிமுறை பற்றியும் கூறப்படும். இவற்றைவிட சமுதாயத்தின் மேல் தளத்தில் இருப்பவர் ஆன சான்றோர் சமானியர்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குதல் வேண்டும். அவர்கள் பிழை புரிந்தால் அது அனைவராலும் இகழப்படும் எனவும் நாடு சிறப்படைய அவர்கள் உழைக்க வேண்டும் இல்லையேல் அழிந்து விடும் எனவும் புத்தர் கூறியுள்ளார்.

> 'உயர்ந்தோங் குச்சி யுவாமதி போல
> நிவுங்தோங் வெண்குடை மண்ணகை நிழற்செய'[15]

பிழைக்கு தீர்ப்பாக தண்டனை வழங்கப்படுகின்றது. அது குற்றம் புரியாது சிலரைத் திருத்த உதவும். சிலர் உதவி செல்வாக்கால் இதில் இருந்து தப்பினும் மறுமையில் உரிய தண்டனை பெறுவர் என பௌத்தம் கூறுகின்றது.

எனவே மேற்சொன்ன ஒழுக்கங்கள் இல்லறத்தார்க்குரிய ஒழுக்கங்கள் எனவும் பௌத்தர்கள் இல்லற வாழ்விலே தவறாது இவற்றை கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என புத்தர் கூறியுள்ளார்.

**துறவறத்தாருக்குரிய ஒழுக்கவியல்**

பௌத்தமானது துறவற ஒழுக்கத்தை வற்புறுத்திக் கூறியமையால் இவ்வொழுக்கம் பௌத்தத்தில் முக்கியம் பெறுகின்றது. விநயகபிடகத்தில் துறவிகளுக்குரிய இலக்கணங்கள் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. இல்லறத்தில் ஐவகைச் சீலங்கட்கும் மேலாக விலக்கப்பட்ட காலங்களில் உண்ணாமையும், ஆடல், பாடல் கூத்துக்களை நாடாமையும்இமாலைகள், மணப்பொருள்கள் முதலியவற்றால் ஒப்பனை செய்யாமையுடன் உயராசனங்கள், இருக்கைகளைப் பயன்படுத்தாமையையும் சேர்த்து எண்வகை சீலங்களையும் புகட்டியுள்ளார். இவற்றை உபோதச சீலம் என்றும் வழங்குவர். திக்கநிகாயம், சுத்தநிபாதம், அங்குத்தரநிகாயம் ஆகிய சுத்தபிடக பகுதிகளில் இச்சீலங்கள் இடம்பெற்றுள்ளன.

பௌத்தத்தில் கூறப்படும் ஒழுக்கமாக சமத்துவச்ச கொள்கையும் ஒன்றாக விளங்குகின்றது. சமத்துவ கொள்கையை முதன் முதலில் உலகுக்கு வைத்த பெருமைக்குரியவர் புத்தரே ஆவார். மனிதனானவன் தான் ஆற்றும் செயல்களே மேன்மைக்கும் தாழ்வுக்கும் காரணம் ஆதலின் பிறந்த குலத்தினால் மேல் கீழ் என்ற இனப்பாகுபாடு செய்யும் வழக்கத்தினைப் புறக்கணித்தார்.

> 'ஓடும் உதிரத்திலும் வடிந்தொழுகும் கண்ணீரிலும்
> தேடிப் பார்த்தாலும் தெரிவதுண்டோ'[16]

எனப் புத்தர் பிரான் இடைச்சிறுவனிடம் வினாவுவதாக கவிமணி தேசிம விநாயகம்பிள்ளை அவர்கள் ஆசிய ஜோதியில் குறிப்பிடுவதில் இருந்து புலனாகின்றது. இதன் மூலம் புத்தர் சாதிக் கொடுமை தவிர்க்கப்பட்டு மக்கள் அன்பால் இணைந்து ஒரு குலமாக வாழ வேண்டும் என்பர்.

பொறாமை, அவா, வெகுளி, மயக்கம் முதலிய தீய குணங்களே அல்லது உணர்ச்சிகளே கொடுமைக்கு காரணம் இவற்றை விட்டு அன்பு வழியை நாட வேண்டும்.என்றார் சிலர் புத்தரின் பௌத்தம் துறவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை என்பர்.

சமுதாயத்தின் மேற்தளத்தில் இருப்பவர்கள் சான்றோர்கள் அவர்கள் சாமானியர்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும்.அவர்கள் பிழைபுரிந்தால்வானில் திகழும் திங்களின் களங்கம் போல எங்கும் யாவராலும் அறியப்பட்டு இகழப்படுவர். ஒழுக்கவாழ்வு ஆற்றும் துறவிகள் ஒரு சிறிதும் பிழை புரிதல் கூடாது அவர்கள் வழுவி நடப்பின் அறம் குன்றும் அறக்குறைவு மழையின்மைக்கு காரணமாகும். எனக் கற்பித்து தவ வாழ்வின் செம்மையை காக்கப் பௌத்தம் முயன்றது. செங்கோன்மை தவம் கற்பு மூன்றிற்கும் உரிய அரிய ஆற்றலை அக்கால சமுதாயம் பெரிதும் மதித்தால் நாடும் வீடும் மேம்பட்டு விளங்கின எனலாம்.

பிராமணர்களும் தருமசாதிரங்களும் புனலின் மூழ்கியும் வேள்வித்தீ ஓம்பியும் துறவு மேற்கொண்டும் தீவினையைப் போக்கலாம் என விரித்தன. சங்காரவன் எனும் அந்தணன் காலையும் மாலைரயும் நீராடும் பழக்கத்தினை உடையவன் பகலில் செய்த பாவம் மாலைக்குளியலாலும் இரவில் புரிந்த பாவம் காலை முழுக்காலும் கழுவப்படும் என்று நம்பினான். மணிமேகலையில் சாலி என்னும் பார்ப்பினி கணவனுக்குச் செய்த தீவினையைப் போக்குவதற்காக காசியினின்றும் புறப்பட்டு குமரித்துறையில் நீராட யாத்திரை மேற்கொண்ட செய்திகளை சாத்தனாரும் சுட்டியுள்ளார். சுதமதியின் பிழைகளை கழுவும் பொருட்டு அவள் தந்தை குமலித்துறையில் காவிரி கடலோடு கலக்கும் பூம்புகார் துறையில் நீராடச் சென்றதையும் ஆசிரியர் உணர்த்துகின்றார். இவ் வைதீக நம்பிக்கைகளை புறக்கணித்து ஒழுங்கு என்னும் பொய்கையில் அறம் எனும் புகட்டினார் புனலாடல் பாவம் போக்கும் கவிவியன்று உண்மையும் ஒழுங்கும் தான் தீவினையைப் போக்கவல்லது என்றரர் புத்தர்.

புத்தர் தான் கண்ட நான்கு வாய்மைகளில் துக்க நிவாரண மார்க்கமாக புத்தர் காட்டிய வழியாக இந் நடுப்பாதை ஆகும். இப்பாதையில் எண்வகை ஒழுக்கங்கள் இணைந்துள்ளன. சமணர்கள் சாற்கும் எண்வகை சமயதரிசனத்துடன் இவ்வெட்டும் ஒப்படற்பாலன. யோகநூலாரும் இயமம், நியமம், ஆசனம், பிரணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி முதலிய எண்வகை நெறிகளை உணர்த்துவர். கடுந்துறவு மேற்கொண்டு ஊனை வருத்துவதால் உய்தி பெறலாம் என்ற வைதீக வழக்கத்தையும் புத்தர் ஏற்கவில்லை. சீலம், சமாதி, பிரக்சை என்ற மூன்றுடன் புத்தம், தருமம், சங்கம் எனும் மும்மணிகளும் ஒருவனின் புலனழுக்கை களைந்து பழுதிலா நெறிக்கு அழைத்துச் செல்லும்.

மனத்தினை கட்டுப்படுத்தின் புலனடக்கம் தானே அமையும். மனத்தை பயிற்றிப் பன்படுத்தி சாந்தமுறச் செய்து சமப்படுத்தி நன்நெறிப்படுத்தி திட நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்று புத்தர் புகட்டியுள்ளார். இந்தநிலைக்கு வந்தபின் மனத்தை யாராலும் அசைக்க முடியாது. இத்தகைய மனம் தீமையில் நின்றும் விலகியது. விடுதலை பெற்ற உள்ளம் என்று இவ்வுயரிய மனநிலையைச் சுட்டுவர். புலனடக்கம் இன்றேல் நன்னடத்தையினைக் காக்கவொண்ணாது நன்னடத்தை காக்கப்படாவிடின் மனத்தின் ஒருமை நிலையை எய்த முடியாது. மனம் ஒருமை இல்லாதுவிடின் பொருள்களை உள்ளவாறு அறிய உதவும் அறிவும் அகவொளியும் அடையமுடியா. இவ்விரண்டும் எய்திலறேன் உலகியல் பெருமிதங்களில் வெறுப்பும் மனித ஆசையின்று விடுதலை பெற முடியாது. ஆதலின் புலன்களை அடக்கி நனனெறியிற் செலுத்துதல் தம் வாழ்க்கையின் உயரபடிகளுக்கு அழைத்துச் செல்லும். தாகம் எடுத்தவன் கிணற்றைக் கண்டு கயிறும் வாளியும் காணாது தவித்தல் போல பிறவி நீக்கம் நிர்வாணப் பேறு என்னும் அறிவு மாத்திரம் பெற்று அதனை அடைவதற்குரிய நன்னெறிகளை மேற்கொள்ளாவிடின் கலக்கமுறுவான் என சுத்தபிடகம் சுட்டுகின்றது. பௌத்தம் கூறுகின்ற பஞ்சசீலங்களை சைவசித்தந்தமும் புலப்படுத்திநிற்கின்றது. தத்துவரீதியில் சைவசித்தாந்தம் முப்பொருளை ஏற்றுக்

கொண்டாலும் ஒழுக்கவியலில் பௌத்தம் கூறம் பஞ்சசீலங்களே சைவசித்தாந்த வாழ்க்கைக்குரிய ஒழுக்க நியமமாக ஏற்றுக்கொள்கின்றது.

## 8. முடிவுரை

மேற்படி ஆய்வின் வழி சைவசித்தாந்தமானது இல்லறத்துக்கு முதன்மை கொடுக்கின்றது. ஏனெனில் அது வாழ்வியல் தத்துவமாகும். தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் எனும் ஐம்புலத்தாரையும் ஓம்புபவனாக இல்வாழ்வான் விளங்குகின்றான் என சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது. ஆனால் பௌத்தமானது இல்லறத்துக்கு முதன்மை கொடுக்கவில்லை. ஏனெனில் இவ்வுலக வாழ்வே துக்கத்துக்கு காரணம் என்ற கருத்தைக் கொண்டதாக பௌத்தம் விளக்குகின்றது. முடிவாகச் சொன்னால் கடவுளை ஏற்றுக் கொள்ளாத பௌத்தம் தன்னொழுக்கத்தின் மூலம் ஒருவன் பரிபூரணநிலை அடைவதையும் சைவ சித்தாந்தம் ஒழுக்கத்தின் மூலமாக ஒருவன் இறை அருளைப் பெற்று அதன் மூலம் பேரின்ப பெருவாழ்வைப் பெறுதலையும் கூறுகின்றது. எனவே முத்தியைப் பற்றிய கருத்து நிலையில் வேறுபட்டாலும் அதை அடையும் வழியாக ஒழுக்கத்தை இரண்டு தத்துவங்களும் ஏற்றுள்ளமை இவ்வாய்வின் வழி குறிப்பிடத்தக்கது.

## அடிக்குறிப்புக்கள்

*1. மணிமேகலை, காதை 30, பாடல் வரி.*

*2. திருக்குறள், 14ம் அதிகாரம், குறள் 131.*

*3. சுந்தரமூர்த்திநாயனார், தேவாரம், 7ம் திருமுறை, திருக்கேதாரம்.*

*4. திருவிளங்கம், மு., (2010), சிவஞானசித்தியார் சுபக்கம், சிவதொண்டன் சபை, யாழ்ப்பாணம், பா.113.*

*5. மணிவாசகன், (2009), திருமந்திரம் மூலமும் எளிய உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, ப.97.*

*6. திருவிளங்கம், மு., (2010), மு. கு. நூ, பா.323.*

*7. இரத்தினசபாபதி, வை., (1988), மெய்கண்ட சாத்திரங்கள், சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை. ப.17.*

*8. திருமந்திரம், 24ம் தந்திரம், பாடல்.327.*

*9. மணிவாசகன், (2009), மு. கு. நூ, ப.91.*

10. www.brahminsnet.com, *தைதிரேய உபநிடதம்.*

*11. சம்பந்தர் தேவாரம், பா.930.*

*12. மு. கு. நூ., காதை 24, வரிகள் 77-78.*

*13. கந்தசாமி, சோ. நா., (1977), பௌத்தம், சென்னைப் பல்கலைக்கழகம், ப.161.*

*14. மணிமேகலை, காதை 25, வரிகள் 110-1, 236-7.*

*15. மேலது, காதை 22, வரிகள் 13-16.*

*16. ககவிமணி தேசிய விநாயகம்பிள்ளை, சி., (1941), ஆசிய ஜோதி, பாடல் 13, ப.48*